பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | ஆவணி 01 | திங்கட்கிழமை | 17.08.2020 | கதிர் 151

# தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு ரெலோவும் உரிமை கோருகிறது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 17

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமையை இறுதி இரண்டரை ஆண்டுகளுக்குத் தமது கட்சிக்குதட தர வேண்டும் எனக் கோரிக்கை முன்வைப்பது என்று ரெலோவின் மத்திய குழுவில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.**

**ரெலோவின் மத்திய குழுக் கூட்டம் நேற்று முன்தினம் திருகோணமலையில் இடம் பெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.**

**ரெலோவின் மேற்படி தீர்மானம் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவருக்கு அறிவிப்பதோடு 20ஆம் திகதிய நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் பிரஸ்தாபிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

**கூட்டமைப்புக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனத்தைப் பெண் பிரதிநிதி, கிழக்கு மாகாண பிரதிநிதி அல்லது தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் என ஒவ்வொரு தரப்புக்கு வழங்குவது என்று சர்ச்சை எழுந்த நிலையில், தற்போது ரெலோவும் தனது பங்கிற்கு ஒரு புதிய கோரிக்கையை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.**

## நாடு முழுக்க இன்று திடீரென மின் தடை!

### விரைவில் சீராகும் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஓக 17

நாடாளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள திடீர் மின்துண்டிப்புவிரைவில்சரிசெய்யப்படும் என மின்வலு அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

கெரவலபிட்டிய மின்சார உற்பத்தி நிலையத்தின் மின் பரிமாற்ற அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறால் இவ்வாறு நாடு முழுவதும் மின் துண்டிப்பு ஏற்பட்டுள்ளது.

நாடாளாவிய ரீதியில் ஏற்பட்ட இந்த திடீர் மின் துண்டிப்பு 2 மணி நேரத்துக்குள் சீர் செய்யப்படலாம் என மின்வலு அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

2

## சிறைகளுக்கு அதிரடிப்படை பாதுகாப்பு !

கொழும்பு, ஓக 16

சிறைச்சாலைகளுக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு கோரப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலை, பூஸா சிறைச்சாலைக்கு விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு கோரப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

இதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் அவர்

2

## மைத்திரியை விசாரணைக்கு அழைக்கின்றது ஆணைக்குழு

கொழும்பு, ஓக 18

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எதிர்வரும் 26 ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக் குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவு அவருக்கு அழைப்பாணை விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஏற்கனவே இன்று செவ்வாய்க்கிழமை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தனவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

2

## கிளிநொச்சியில் தமிழரசுக்கு எதிராக தேர்தலுக்குப் பின் 20முறைப்பாடுகள்

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு பின் கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழரசுக் கட்சிக்கு எதிராக 20முறைப்பாடுகள் கிளிநொச்சியில் உள்ள பொலிஸ் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் 11 முறைப்பாடுகளும், தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் இரண்டு முறைப்பாடுகளும், பளை பொலிஸ் நிலையத்தில் நான்கு முறைப்பாடுகளும், பூநகரி பொலிஸ் நிலையத்தில் இரண்டு முறைப்பாடுகளும், முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாடும் என பதிவு செய்யப்பட்டுள்ளன.

தேர்தலுக்கு பின்னர் கிளிநொச்சியில் தமிழரசு கட்சி ஆதரவாளர்களால் ஏனைய கட்சிகளின் ஆதரவாளர்களின் வீடுகளுக்குள் வெடி கொளுத்தியமை, அச்சுறுத்தியமை, உடைமைகளுக்கு சேதம் விளைவித்தமை, தாக்கியமை போன்ற பல்வேறு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## ஆசிரியர் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஓக 17

இளவாலையில் உள்ள பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர் இனந்தெரியாத கும்பல் ஒன்றால் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

இன்று காலை 7.30 மணியளவில் அவர் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது இளவாலையில் வைத்து ஆசிரியர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று

2

## வடக்கு – கிழக்கில் நுண்கடன்களால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம்

### ஷெஹான் சேமசிங்க அறிவிப்பு

கொழும்பு, ஓக 17

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நுண்கடன் திட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என சமுர்த்தி, நுண்நிதி மற்றும் சுயத் தொழில் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அப்பகுதி மக்கள் பொருளாதார ரீதியில் சுயமான முன்னேற்றமடைவதற்கு சுய கைத்தொழில் முறைமைகள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கில் நுண்கடன் திட்டங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கை தொடர்பாக வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

2

## பதவி வேண்டாம் என்கிறார் பந்துல

கொழும்பு, ஓக 17



அமைச்சரவைப் பேச்சாளர் பதவி தனக்கு வேண்டாம் என்று அமைச்சர் பந்துல குணவர்தன பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தனக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பதவியை உரிய

2

## தமிழரசுப் பின்னடைவிற்குப் பொறுப்பேற்று வவுனியா மாவட்டத் தலைவர் இராஜினாமா

### மருத்துவர் சத்தியலிங்கம் அறிவிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஓக.17

வவுனியா மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சிக்கு ஏற்பட்ட தேர்தல் பின்னடைவிற்கு தார்மீகப் பொறுப்பேற்று மாவட்ட கிளைத் தலைவர் பதவியில் இருந்து மருத்துவர் ப.சத்தியலிங்கம் பதவி விலகினார்.

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி வவுனியா மாவட்டத்தில் கணிசமான வாக்குகளைப் பெற்ற போதும் எதிர் பார்த்த வெற்றியை பெறத் தவறிவிட்டது. எனவே இவ் விடயத்திற்கு அடுத்தவரை நோக்கி விரலை நீட்டவோ அல்லது காரணங்களை அடுக்கவோ விரும்பவில்லை. எனது ஒரே நோக்கம் தமிழர்களும் தமிழ் அரசும் வெற்றியீட்ட வேண்டும் என்பதே ஆகும்.

இந்த இலக்பை மாவட்டத்தில் அடைவதற்கு மாவட்டத்

2

## கோப்பாய் பொலிஸார் மீது இனந்தெரியாதோர் தாக்கு!

யாழ்ப்பாணம், ஓக 17

ஊரெழு பகுதியில் கோப்பாய் பொலிஸார் மீது இனந்தெரியாத நபர்களால் இன்று திங்கட்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பொலிஸார் இருவர் காயமடைந்துள்ளனர்.

ஊரெழு பகுதியில் உள்ள நபர் ஒருவருக்கு நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த நபரைக் கைது செய்வதற்காக கோப்பாய் பொலிஸார் இருவர் இன்று காலை மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர்.

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## வடக்கு – கிழக்கில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த அரசின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவில்லை என்பதனாலேயே தமிழ் – முஸ்லிம் மக்கள் பொதுஜன பெரமுனவிற்கு இம்முறை ஆதரவு வழங்கி தமிழ் அரசியல் கட்சிகளை புறக்கணித்துள்ளார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் நுண்கடன் திட்டம் பெரிதும் பாதிப்பை ஏற்டுத்தியுள்ளது . ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான இடைக்கால அரசில் இந்த விடயம் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டது.

நுண்கடன் திட்டங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மத்திய வங்கி ஊடாக நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் பொருளாதார ரீதியில் சுயமாக முன்னேற்றுவதற்கான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். சுய கைத்தொழில் துறையை அவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## மைத்திரியை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க ஆகியோரையும் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆணைக் குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு

## ஆசிரியர் மீது .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்தனர்.

அரியாலையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரே தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

2 மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் ஆசிரியரை வீதியில் வழிமறித்து அவர் மீது தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். தாக்குதலுக்குள்ளான ஆசிரியர் பாடசாலை அதிபர் ஊடாக இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை வழங்கியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பதவி வேண்டாம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் முன்னெடுப்பதே தனது இலக்கு எனவும், எனவே, மேலதிக பொறுப்புகளில் இருந்து தன்னை விடுவிக்குமாறும் அவர் பிரதமரிடம் கேட்டுள்ளார்.

ஜனாதிபதிகோட்டாபயவெற்றிபெற்ற பின்னர் இடைக்கால அரசின் இணை அமைச்சரவைப் பேச்சாளர்களாக பந்துல குணவர்தன, ரமேஷ் பத்திரண ஆகியோர் செயற்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறையும் இருவரையும் நியமிப்பதற்கே திட்டமிடப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே பதவியை பந்துல நிராகரித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

## கோப்பாய் பொலிஸார் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பிரதேசத்தில் அந்த நபரைத் தேடியபோது, அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதன்போதே பொலிஸார் மீது இனந் தெரியாத நபர்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# புத்தசாசன அமைச்சும் ஜனாதிபதிக்கே உரியது!

## அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல்

புத்ததாசன அமைச்சு பதவியை ஜனாதிபதி வகிக்க வேண்டுமென அறிவித்து உத்தரவிடுமாறு கோரி சட்டத்தரணி அருன லக்சிறி உனவட்டுன உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவை இன்று (திங்கட்கிழமை) தாக்கல் செய்துள்ளார்.

மேலும் ஜனாதிபதியிடம் காணப்படுகின்ற பாதுகாப்பு அமைச்சு பதவியை, வேறுமொரு நாடாளுமன்ற உறுப்பினரிடம் கையளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த மனுவில் அவர் மேலும் கூறியுள்ளதாவது -

பாதுகாப்பு அமைச்சுடன் சேர்த்து புத்ததாச அமைச்சும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு கையளிக்கப்படுவதானது அரசமைப்பை மீறும் செயற்பாடு என நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

மேலும் ஏதேனுமொரு மாவட்டத்தின் வாக்காளரால் அல்லது தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் அன்றி முழு மக்களின் நேரடி வாக்குகளால் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுகின்றமையால் பாதுகாப்பு மற்றும் புத்ததாசன அமைச்சினை ஜனாதிபதி வகிப்பது அரசமைப்பின் பிரகாரம் ஏற்புடையதாகும்.

அவ்வாறு செய்யத் தவறினால் அரசமைப்பின் 9, 10 மற்றும் 12ஆம் சரத்து ஆகியவற்றில் முதலாம் பிரிவில் பாதுகாக்கப்படும் உரிமைகள் மீறப்படுகின்றனவாகவே கருதப்படும்.

அரசமைப்பின் 30ஆவது சரத்துக்கு அமைய ஜனாதிபதியானவர் அரசாங்கத்தின் தலைவராகவும் நிறைவேற்று அதிகாரத்தின் தலைமையை வகிப்பதாலும் அரசமைப்பின் 9ஆவது சரத்துக்கு அமைய புத்த மதத்தின் முன்னுரிமையை பேணுதல் என்ற விடயத்தில் ஜனாதிபதி அடிப்படை குற்றம் இழைப்பதாகவே பார்க்கப்படும் என மனுவில் அருன லக்சிறி உனவட்டுன சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மனுவின் பிரதிவாதியாக ஜனாதிபதிக்கு பதிலாக சட்டமா அதிபர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

## தமிழரசுப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையே முழுப் பொறுப்பாகும். அதன்பால் நானே மாவட்டத் தலைவராகச் செயற்படும் காலத்திலேயே 2020ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றது . இந்தத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவிற்காக மனம் வருந்துகின்றேன்.

இந்த பின்னடைவிற்குத் தனியே வருத்தம் தெரிவித்து தப்பவும் விரும்பாத காரணத்தாலும் தலைவர் எந்த நெருக்கடியிலும் வெற்றியை பெற்றிருக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் எனது மாவட்டத் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்கின்றேன். இந்த முடிவை நான் மாவட்ட கிளையில் தெரிவித்து விட்டேன். இதேபோல் கட்சியின் தலைமைக்கும் விரைவில் எழுத்து மூலம் அறிவிப்பேன்.

எனது பதவி விலகலை ஏற்று இன்னும் துடிப்பான இளைஞனை இப்பதவிக்கு நியமித்து கட்சியை முன்கொண்டு செல்லவேண்டும். அதற்கு நானும் தொண்டனாக இருந்து உழைப்பேன். - என்றார்.

# வீழ்ச்சியடைந்தது தங்கத்தின் விலை!

உலக சந்தையில் தங்கத்தின் விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த மூன்று மாத காலப்பகுதியில் தங்கத்தின் விலையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தங்கத்தின் விலையில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக உலக சந்தைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஓர் அவுன்ஸ் தங்கத்தின் விலை கடந்த வாரம் 4.45 சதவீதம் அல்லது சுமார் 90 டொலர் சரிந்து வார இறுதியில் 1,950 டொலராக பதிவாகியுள்ளது.

எனினும் கொரோனா வைரஸ் பரவலுக்கு முன்னதான தங்கத்தின் விலையுடன் ஒப்பிடும் போது இதுவும் அதிகரிப்பாகும்.

கொரோனா வைரஸ் நெருக்கடியால் தங்கத்திற்கு ஏற்பட்ட கேள்வி காரணமாக இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக பொருளியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதன் காரணமாக இலங்கையில் 24 கரட் தங்கத்தின் விலையில் ஒரு இலட்சத்திற்கும் மேலும் 22 கரட் தங்கத்தின் விலை 96 ஆயிரம் ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சிறைகளுக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார்.

இதனிடையே, 21 சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் 15 பேர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு எதிரான விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நிர்வாக ரீதியிலான உதவிகளை வழங்கும் மற்றும் அநாவசிய தொடர்புகளை பேணும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## நாடு முழுக்க இன்று ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாக நாடளாவிய ரீதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக மின்வலு அமைச்சு தெரிவித்திருந்தது.

மின் பரிமாற்ற அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இவ்வாறு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக மின்வலு அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இன்று நண்பகல் 12.50 மணி முதல் திடீரென நாடளாவிய ரீதியில் மின் தடை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பரிதாபத்திற்குரிய ரணில்

இலங்கை அரசியலில் தற்போதைய நிலையில் பெரிதும் பரிவுக்குரிய – பரிதாபத்துக்குரிய – பாத்திரம் யார் என்று கேட்டால் அரசியல் அரிச்சுவடி படித்தவரும் கூட ரணில் விக்கிரமசிங்க என்று கண்மூடிக் கொண்டு பதில் சொல்லிவிடுவார்.

அத்துணை பரிதாபத்துக்குரியவராக இன்று அவர் மாறி விட்டிருக்கின்றார்.

தென்னிலங்கையில் பௌத்த, சிங்களப் பேரினவாதம் எழுச்சி கொண்டு விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது. அதனால் புறமொதுக் கப்பட்டு, தூக்கி வீசிக் கடாசப்பட்டு, தள்ளி வைக்கப்பட்டிருக்கும் அரசியல் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

அவருக்கு ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது?

அவர் சிறுபான்மையினருக்கு – குறிப்பாகத் தமிழர்களுக்கு – நிரந்தரப் பிரயோசனமாக ஏதேனும் செய்தாரா என்பது கேள்விக் குறிதான்.

ஆனால், சிறுபான்மையினரின் – தமிழர்களின் – பரிவிற்குரிய தலைவராக, அவர்களுக்கு விட்டுக் கொடுக்கும் சிங்களத் தலை வராக, அவர் செயற்பட்டார் என்ற கருத்து நிலைப்பாடு பௌத்த, சிங்கள மக்கள் மத்தியில் ஆழமாகப் பதிக்கப்பட்டமைதான் அவர் இலங்கையின் அரசியல் வரலாற்றுப் பக்கத்தில் தீண்டத்தகாதவராக இப்படி புறமொதுக்கப்பட்டமைக்குப் பிரதான காரணமாகும்.

இதில் பெரும் பரிதாபம் என்னவென்றால் அவர் தென்னிலங்கை பௌத்த, சிங்கள மக்களால் மட்டும் புறமொதுக்கப்பட்டவரல்லர், எந்தச் சிறுபான்மையினருக்கு ஆதரவாளர் – பரிவிற்குரியவர் – என்று பெரும்பான்மையினர்களால் அவர் அடையாளப்படுத்தப்பட் டாரோ அதே சிறுபான்மையினராலும் கூட அவர் உதாசீனப்படுத்தப்பட் டார் என்பதுதான்.

இன்று சஜித் தரப்புடன் அணி சேர்ந்து அரசியல் நடத்திக் கொண் டிருக்கும் மனோ கணேசன் போன்றோரே, ரணிலின் இந்தப் பரிதாப நிலைமை குறித்து ஒப்புதல் வாக்குமூலமளித்துள்ளனர்.

*"சிறுபான்மைத் தமிழ், முஸ்லிம் கட்சித் தலைவர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை சுவரில் சாய்த்து, பயமுறுத்தி காரியம் செய்து கொள்கிறார்கள் என்ற அபிப்பிராயத்தை தென்னாட்டில் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்த அரச ஊடகங்கள் மற்றும் அரசு சார்பு தனியார் ஊடகங்கள் பெரும் முயற்சி எடுத்தன. இப்படிச் சொல்லியே ரணில் விக்கிரமசிங்கவை இந்த அரச கட்சி அணி, அரசு சார்பு பௌத்த பிக்குகள் அணி என்பவை அழித்தன. ஆகவே, சஜித் பிரேமதாஸவையும், இன் னொரு ரணில் விக்கிரமசிங்கவாகவும், பலவீனமான தலைவரா கவும் சித்திரித்து, ஆரம்பத்திலேயே அழித்துவிட இந்த அரசு மிகப்பெரும் முயற்சி எடுத்தது. இவற்றை நாம் உணர்ந்தோம்."*

– இப்படித் தெரிவித்துள்ளார் மனோ கணேசன்.

ஆக, தமிழர்கள் விரும்புவதை – எதிர்பார்ப்பதை விட்டுக் கொடுத்து விடக் கூடிய 'பலவீனமான' தலைவர் ரணில் என்று சிங்கள மக்கள் கருதியமையாலேயே அவர் தென்னிலங்கையில் செல்லாக்காசானார்.

ஆனால், மறுபுறத்தில் தமிழர்களால் அவர் மதிக்கப்பட்டாரா என்றால் அதுவும் இல்லைத்தான். இன்று தமிழர் பக்கத்திலும் தம்படிக் காசுக்கு மதிக்கப்படுபவராக அவர் இல்லை.

உண்மையில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஒருவர் இருக் கத்தக்கதாக, அவரை மீறி துணிச்சலுடன் முடிவு எடுத்த ஒரேயொரு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கதான். நிறைவேற்று அதிகார ஜனாதி பதியை மீறி தமிழர் தரப்புடன் ஒப்பந்தம் செய்தவர் அவர்.

2001 ஆம் ஆண்டு டிசெம்பரில் நடந்த பொதுத் தேர்தலில் அரும்பொட்டில் அவரால் ஆட்சி அமைக்க முடிந்தது. 225 உறுப்பினர் களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 113 ஆசனங்களைப் பெற்று ஒரே யொரு மேலதிக ஆசனப் பலத்துடன் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியமைத்தார்.

அப்போது முழு அளவிலான நிறைவேற்றதிகாரத்துடன் அதி காரத்தில் இருந்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அவரே முப்படைகளின் தளகர்த்தர். பாதுகாப்பு அமைச்சும் அவருக்குக் கீழேயே இருந்தது. முப்படைகளும் அவரது கட்டுப்பாட்டிலேயே இருந்தன.

அப்படி இருக்கத்தக்கதாக அப்போது வடக்கு, கிழக்கில் பெரும் பகுதியைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டிருந்தமையோடு அங்கு ஒரு நிழல் அரசையும் நடத்திக் கொண்டிருந்த விடுதலைப் புலிக ளோடு ஒரு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தன்பாட்டில் ரணில் விக் கிரமசிங்க செய்தார். அந்த ஒப்பந்தம் செய்யப்படும் வரை அந்த ஒப்பந்த வாசகங்கள் நாட்டின் ஜனாதிபதியும், முப்படைகளின் தள கர்த்தருமான சந்திரிகா குமாரதுங்கவுக்குக் கூடத் தெரிந்திருக்க வில்லை.

பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரி காவுக்குக் கூடத் தெரியாமல் செய்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை, பிரதமர் பதவியில் இருந்து இரண்டரை ஆண்டுகள் கழித்து ரணில் இறங்கும் வரை ஜனாதிபதியால் கூட முறிக்க முடியவில்லை.

அப்படி மற்றைய சிங்களத் தலைமைகளை மீறித் தமிழருடன் – புலிகளுடன் – யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்தமையால் அதற்கு 'நன்றிக் கடனாக' 2005 ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பு திட்ட மிட்டு அவரைத் தோற்கடித்தது.

அன்று முதல் இன்று வரை தமிழர்களாலும் சரி, சிங்களவர்களா லும் சரி, ஏற்றுக் கொள்ளப்படாத ஓர் அரசியல் பாத்திரமாக தோற் கடிக்கப்பட்டு, வரலாற்றில் தீண்டப்படாத அரசியல் சக்தியாகப் புறமொதுக்கப்படும் அவலம் ரணிலுக்கு நேர்ந்திருக்கின்றது.

பாவம் ரணில்!

# சிறுபான்மை இனம், பெரும்பான்மை இனம் என்ற வேறுபாடு ராஜபக்ஷக்களின் ஆட்சியில் இல்லை

## பிரதமர் மஹிந்த சொல்கின்றார்



எமது ஆட்சியில் சிறுபான்மை இனம், பெரும்பான்மை இனம் என்ற வேறுபாடுகள் இல்லை. அனைத்து இன மக்களும் இலங்கை மாதாவின் பிள்ளைகள். இன ரீதியில் எவருக் கும் நாம் அமைச்சுகளை வழங்கவில்லை. தகுதி நிலையில் உள்ளவர்களுக்கே அமைச் சுப் பதவிகளை ஜனாதிபதி வழங்கியுள்ளார். அமைச்சுகளின் எண்ணிக்கை வரைய றைக்கேற்ப மேலும் தகுதியானவர்களை இணைத்துக்கொள்வோம்.

–இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

புதிய அமைச்சரவையில் சிறுபான்மை யினருக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

புதிய அமைச்சரவையில் தமிழர் ஒரு வரும், முஸ்லிம் ஒருவரும் என இரண்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும், இராஜாங்க அமைச்சுகளிலும் தமிழர்கள் இருவர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர், முஸ்லிம்களில் எவருமே நியமிக்கப்பட வில்லை எனவும் எதிரணியினர் இனவாதத் தைத் தூண்டும் வகையில் தமிழ், ஆங்கில, சிங்கள ஊடகங்களில் கருத்துக்களை வெளி யிட்டு வருகின்றனர்.

சிறுபான்மை இனத்தவர்களில் நால்வ ருக்கு மட்டுமே புதிய அமைச்சரவையில் இடம் கிடைத்துள்ளது என்பதே எதிரணியினரின் இனவாதப் பரப்புரையின் தலைப்பாக உள் ளது. சிறுபான்மை இன மக்களை இந்த அரசு புறக்கணித்துள்ளது என்ற விசமத்தனமான சிந்தனையை தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தி யில் எதிரணியினர் விதைக்க முற்படுகின்றனர்.

எமது ஆட்சியில் சிறுபான்மை இனம், பெரும்பான்மை இனம் என்ற வேறுபாடுகள் இல்லை. அனைத்து இன மக்களும் இலங்கை மாதாவின் பிள்ளைகள்.

இன ரீதியில் எவருக்கும் நாம் அமைச்சு களை வழங்கவில்லை. தகுதி நிலையில் உள்ளவர்களுக்கே அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி வழங்கியுள்ளார். அமைச்சுகளின் எண்ணிக்கை வரையறைக்கேற்ப மேலும் தகுதியானவர்களை இணைத்துக்கொள் வோம்.

அதேவேளை, ஒவ்வொரு மாவட்டங்களுக் கும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் களையும் நியமித்துள்ளோம். வடக்கிலுள்ள சகல மாவட்டங்களுக்கும் அபிவிருத்திக் குழுத் தலைவர்களாக தமிழ்ப் பிரதிநிதிகளையே நியமித்துள்ளோம். அவர்களில் ஒருவர் முஸ்லிம் பிரதிநிதி. அதேவேளை, கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் அபிவிருத் திக் குழுத் தலைவராக தமிழ்ப் பிரதிநிதி ஒரு வரையே நியமிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

நாட்டிலுள்ள அனைத்து இன மக்களை யும் ஒரே கண்ணோட்டத்திலேயே நாம் பார்க் கின்றோம். எந்த இனத்தையும் இனவாத நோக்குடன் நாம் பார்க்கவில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமை யிலான அரசே தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கியது என்ற வரலாற்றுப் பதிவை இந்த ஆட்சியில் நாம் ஏற்படுத்துவோம் – என்றார்.

# ஒற்றுமை தொடர்ந்தால் வெற்றி இரட்டிப்பாகும்!

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.17

கட்சி, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால், புத்தளம் வாழ் மக்கள் ஒன்றுபட்டதன் காரண மாகவே, மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நாம் இழந்த பிரதிநிதித்துவத்தை பெற முடிந் தது. இனிவரும் காலங்களிலும் இவ்வாறு ஒற்றுமையுடன் செயற்பட்டால் இதைவிட பாரிய வெற்றிகளைப் பெற முடியும்.

– இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங் கிரஸ் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித் தார்.

புத்தளம், வேப்பமடுவில் வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ் வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:–

நடந்து முடிந்த பொதுத் தேர்தல், புத்தளம் சிறு பான்மை மக்களுக்கு நல்லதொரு செய்தி யைக் கூறுகின்றது.

பெரும்பான்மையினகட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆகியவற்றின் பின் னால், நாம் பிரிந்து நின்று அரசியல் செய்ததனா லேயே, முப்பது வருடங்களுக்கு மேலாக பிரதிநிதித்துவத்தை இழந்து தவித்தோம். சமூக, அரசியல், பொருளாதார ரீதியில் பின்னடைவு அடைந்தோம். பல்வேறு அநியாயங்கள் எமது சமூகத்துக்கு இழைக்கப்பட்டன. நமக்கென்று நாடாளுமன்றப் பிரதிநிதி ஒருவர் இல்லாதத னாலேயே இந்தநிலை ஏற்பட்டது.

எனவே, இதனை அடைய வேண்டு மென்ற முயற்சியில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நீண்டகாலமாக ஈடுபட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சகோதரர் ரவூப் ஹக்கீமும் இதற்கு உடன்பாடு கண்டார். எல்லோரும் ஒன்றுசேர்ந்து கூட்ட



மைப்பை உருவாக்கியதனாலேயே, நாம் இந்த வெற்றியைப் பெறமுடிந்தது. ரணில், சஜித், மஹிந்த ஆகிய தலைவர்கள், இன்று புத்தளம் தொகுதியில் தமது பார்வையை செலுத்தும் நிலையை உருவாக்கியது நமது ஒற்றுமையே.

கூட்டமைப்பின் மூலம் தெரிவான அலி சப்ரி ரஹீம், சமூக அக்கறை கொண்டவர். இப்போது அவர் உங்கள் பலத்தினால் எம்.பி யாகியுள்ளார். இவரின் கரங்களை பலப்படுத் துவோம் – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கோழிக்கோடு விபத்து மேலும் ஒருவர் சாவு!




கேரள மாநிலம் கோழிக்கோடு விமான விபத்தில் உயிரிழந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 19 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பயணியொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமையாலேயே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

டுபாயில் இருந்து இந்தியா வருகை தந்த எயார் இந்தியா விமானம் தரையிறங்கும் போது ஏற்பட்ட விபத்தில் 16 பேர் சம்ப இடத்திலேயே உயிரிழந்தனர். பலர் காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் இ பாஸ்சேவை இன்று முதல் நடைமுறைக்கு!

தமிழகத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியின் அறிவுத்தலுக்கு அமைய இ – பாஸ் நடைமுறை இன்று (திங்கட்கிழமை) முதல் அமுலுக்கு வருகிறது.

கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கையாக 7ஆம் கட்ட ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஊரடங்களில் கடுமையான நடைமுறையாக இ – பாஸ் நடைமுறை பின்பற்றப்படுகிறது.

இந்நிலையில் குறித்த இ – பாஸை வழங்குவதில் சில முறைகேடுகள் நடக்கின்றன எனவும், மருத்துவம்





மற்றும் திருமணம் ஆகிய தேவைகள் தவிர்த்து பிற தேவைகளுக்காக இ – பாஸ் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் முன்வைக்கப்பட்டது.

இதற்கிடையில் இ – பாஸ் நடைமுறையை இரத்து செய்வதாக இந்திய மத்திய அரசு அறிவித்தது. இருப்பினும் தமிழகத்தைப் பொருத்தவரையில் இந்தச் சேவை நடைமுறையில் இருக்கும் என முதலமைச்சர் அறிவித்திருந்தார்.

இதனையடுத்து கட்டாய தேவைகளுக்காக ஆதார் அல்லது ரேன் அட்டை விவரங்களுடன் விண்ணப்பிக்கும் அனைவருக்கும் இ – பாஸ் கிடைக்கப்பெறும் என முதலமைச்சர் அறிவித்திருந்தார். இந்நிலையில் குறித்த சேவை இன்று முதல் நடைமுறைக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எஸ்.பி.பி. குணமடைய ரஜனி பிரார்த்தனை!





எஸ்.பி.பாலசுப்ரமணியம் விரைவில் குணமடைய வேண்டும் என நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் இன்று (திங்கட்கிழமை) தனது ருவிட்டரில் காணொளியொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், 50 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவில் உள்ள பல மொழிகளில் தன்னுடைய இனிமையான குரலால் பாடி கோடி கோடி மக்களை மகிழ வைத்த மதிப்பிற்குரிய எஸ்.பி.பி. அவர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று அபாய கட்டத்தை தாண்டிவிட்டார் என கேள்விப்பட்டதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி.

இன்னும் தீவிர சிகிச்சையில் உள்ள எஸ்.பி.பி அவர்கள் சீக்கிரம் குணமடைய வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திகிறேன்' என்று தெரிவித்துள்ளார்.

இந்திய மொழிகள் அனைத்திலும் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்கள் பாடி கின்னஸ் சாதனை நிகழ்த்திய பிரபல பின்னணி பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்துக்கு கடந்த 5ஆம் திகதி கொரோனா பாதிப்பு ஏற்பட்டு சென்னை சூளைமேடு பகுதியில் உள்ள எம்.ஜி.எம். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்..

கடந்த 13ஆம் திகதி உடல்நிலையில் திடீர் பின்னடைவு ஏற்பட்டு மருத்துவ குழுவின் ஆலோசனையின்படி தீவிர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

செயற்கை சுவாசக்கருவிகள் பொருத்தப்பட்டன. அவரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும் மருத்துவ குழுவின் தீவிர கண்காணிப்பில் இருக்கிறார் என்றும் மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் உடல்நிலை சீரான நிலையில் உள்ளது என்றும் அவருக்கு தீவிர சிகிச்சை பிரிவில் வைத்து மருத்துவ குழு தொடர்ந்து சிகிச்சை அளித்து வருகிறது என்றும் மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டது. எஸ்.பி பாலசுப்பிரமணியம் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு இருப்பதாக அவரது மகன் எஸ்.பி.பி சரண் தெரிவித்துள்ளார்.

எஸ்.பி.பால சுப்பிரமணியம் விரைவில் உடல் நலம் பெற்று வீடு திரும்ப வேண்டும் என்று திரைப் பிரபலங்கள், அரசியல் பிரமுகர்கள் என பல தரப்பினரும் விருப்பம் தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனா பாதித்தோர் எண்ணிக்கை இந்தியாவில் 26 லட்சத்தைக் கடந்தது!

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 26 இலட்சத்து 47 ஆயிரத்து 316 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று ஒரேநாளில் புதிதாக 58 ஆயிரத்து 108 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

அத்துடன் புதிதாக 961 பேர் உயிரிழந்துள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 51 ஆயிரத்து 45 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் குறித்த தொற்றில் இருந்து குணமடைந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 19 இலட்சத்து 18 ஆயிரத்தை கடந்துள்ளதுடன், 6 இலட்சத்து 78 ஆயிரதலுக்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவகின்றனர் என மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.



# தமிழகத்தில் ஆயுர்வேத முறையில் தொற்றுநோய்க்கான ஆராய்ச்சிகள்

தமிழகத்திலும் ஆயுர்வேத முறைப்படி தொற்று நோய்களுக்கான ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன என அமைச்சர் விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஆய்வு பணிகள் மேற்கொண்ட பின்னர் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கொரோனா தொற்றுக்குப் பின்னர் 15 ஆயிரம் மருத்துவப் பணியாளர்கள் புதிதாகப் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர் என அமைச்சர் விஜயபாஸ்கர் கூறினார்.

# எல்லைப் பிரச்சினையில் இந்தியாவுக்கு ஆதரவு அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் ஜோபிடன்!

இந்தியா தற்போது சந்தித்து வரும் உள்நாட்டு எல்லைப் பிரச்சினைகளில் ஆதரவாக இருப்பேன் என அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வேட்பாளரான ஜோ பிடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வாழ் இந்தியர்கள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடரந்து கருத்துத் தெரிவித்த அவர், 'கடந்த 15 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவுடன் சிவில் அணு ஒப்பந்தம் நிறை



வேறுவதற்கு முன்னணியில் இருந்து நான்தான் பணியாற்றினேன்.

அப்போது நான் கூறியதுமை இந்தியாவும், அமெரிக்காவும் நெருங்கிய நட்புநாடுகளாக மாறினால் கூட்டாளிகளாக இருந்தால் இந்த உலகம் பாதுகாப்பானதாக மாறும் என்றேன்.

நான் ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்படுவேனாகில் இந்த வார்த்தையை நான் தொடர்ந்து நம்புவேன். இந்தியா தற்போது சந்தித்துவரும் உள்நாட்டு பிரச்சினைகளிலும் எல்லைப் பிரச்சினைகளிலும் அச்சுறுத்தல்களிலும் அந்நாட்டுக்கு நாங்கள் ஆதரவாக இருப்போம்.

இருநாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தை அதிகப்படுத்த தேவையான நடவடிக்கைகளையும் பெரிய சவாலாக இருக்கும் பருவநிலை மாற்றம், உலக சுகாதார பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் அளிப்போம்.

அதுமட்டுமல்லாமல் இரு நாடுகளிலும் ஜனநாயகத்தை வலுப்பெறுவதற்கு உழைப்போம். ஏனென்றால் இரு நாடுகளிலும் பன்முகத்தன்மைதான் பரஸ்பர வலிமை, இரு நாடுகளுக்கு இடையிலான நட்புறவின் ஆழம் அதிகரிக்கும்' எனத் தெரிவித்துள்ளார்.

# பிரணாப் முகர்ஜியின் உடல்நிலை தொடர்ந்தும் கவலைக்கிடமே!



முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப்முகர்ஜியின் உடல்நிலை தொடர்ந்தும் கவலைக்கிடமாகவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பிரணாப் முகர்ஜிக்கு மூளை இரத்த நாளங்களில் ஏற்பட்டுள்ள அடைப்பை நீக்குவதற்கான அறுவைச் சிகிச்சை இராணுவ மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டது.

அறுவைச் சிகிச்சைக்குப்பின் மூளையில் இருந்த அடைப்பு நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதுடன், அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் செயற்கை சுவாசக் கருவி உதவியுடன் சிகிச்சை பெற்று வருகிறார் என இராணுவ மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் அவருடைய உடல் நிலையில் எந்த மாற்றமும் இல்லை எனவும் அவருக்குத் தொடர்ந்தும் செயற்கைச் சுவாசம் அளிக்கப்பட்டு வருவதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆயிரக் கணக்கானோர் ஒன்றுசேர்ந்து பெலாரஸில் ஜனாதிபதிக்கு ஆதரவு!



பெலாரஸில் ஜனாதிபதி அலெக்ஸாண்டர் லுகஜன்கோவுக்கு எதிராக ஒருபுறம் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், மறுபுறம் ஆயிரக் கணக்கானோர் ஒன்று திரண்டு அவருக்கு ஆதரவு அளித்துள்ளனர்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) தலைநகர் மின்ஸ்கில் அவருக்கு ஆதரவாக நடைபெற்ற ஊர்வலத்தில் ஆயிரக் கணக்கானோர் பங்கேற்றனர்.

இந்த ஊர்வலத்தின் போது ஜனாதிபதியை வாழ்த்தி அவர்கள் கோஷங்கள் எழுப்பினர். உக்ரேனில் கடந்த 2013 - 14 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மக்கள் போராட்டத்தால், அப்போதைய ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் நாட்டை விட்டு வெளியேறியமையைப் போன்ற சம்பவம் பெலாரஸில் நடக்காது என்று ஊர்வலத்தில் சென்றவர்கள் முழங்கினர்.

'ஜனாதிபதி லுகஜன்கோவை தற்போது எல்லோரும் எதிர்க்கின்றனர். அவர்களுக்கு எங்களது ஆதரவு தேவைப்படுவதால் இந்த ஊர்வலத்தில் பங்கேற்றோம்' என்று ஊர்வலத்தில் பங்கேற்ற ஒருவர் கூறினார்.

சோவியத் ஒன்றியத்திலிருந்து பெலாரஸ் பிரிந்தது முதல் அந்த நாட்டை 26 ஆண்டுகளாக ஆண்டு வரும் சர்வாதிகார ஆட்சியாளர் அலெக்ஸாண்டர் லுகஜன்கோ, கடந்த வாரம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 80 சதவீத வாக்குகள் பெற்று மீண்டும் வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டது. வாக்கு கணிப்புகளின் அடிப்படையில், இந்தத் தேர்தலில் அமோக வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் ஸ்வெட்லானா ஷிகானோஸ்கயாவுக்கு வெறும் 10 சதவீத வாக்குகளே கிடைத்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு செய்து, இந்தத் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டன என நடுநிலையாளர்களும், எதிர்க்கட்சியினரும் குற்றம் சாட்டி வருகின்றனர். இந்த நிலையில், தேர்தல் முடிவுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த ஒரு வாரமாக தீவிர போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

## நியூஸிலாந்தில் மீண்டும் கொரோனா ஒத்திவைக்கப்பட்டது பொதுத் தேர்தல்!



நியூஸிலாந்தில் மீண்டும் கொரோனா தொற்று பரவியதால், அங்கு நடைபெறவிருந்த பொதுத் தேர்தல் மேலும் 4 வாரங்களுக்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அறிவிப்பு இன்று (திங்கட்கிழமை) நியூஸிலாந்து பிரதமர் ஜசிந்தா ஆர்டொ்ன் வெளியிட்டார். அத்தோடு, நாட்டின் பொதுத் தேர்தல் ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி இடம்பெறுமென அறிவித்துள்ளார்.

102 நாள்களாக புதிய கொரோனா தொற்று நோயாளிகள் எவரும் அடையாளம் காணப்படாதமையை அடுத்து செப்ரெம்பர் 19 ஆம் திகதி சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் நடத்தப்படுமென அந்நாட்டின் தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இருப்பினும் கடந்த வாரம் கொரோனா தொற்று மீண்டும் அதிகரித்த காரணத்தால் தேர்தல் நடத்துவதை ஒத்திவைக்குமாறு பலர் கோரிக்கை விடுத்துவந்தனர்.

குறிப்பாக நியூஸிலாந்தில் செப்ரெம்பர் மாதம் நடத்தத் திட்டமிடப்பட்ட தேர்தலை தள்ளி வைக்குமாறு நியூஸிலாந்து துணைப் பிரதமர் வின்ஸ்டன் பீட்டர்ஸ் நேற்று பிரதமர் ஜெசிந்தா ஆர்டொ்னுக்கு கடிதம் எழுதினார்.

நேற்று நியூஸிலாந்தில் 13 உறுதிப்படுத்தப்பட்ட தொற்று நோயாளிகள் அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்து தற்போது 78 நோயாளிகள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதனையடுத்து 1.7 மில்லியன் மக்கள்தொகை கொண்ட நாட்டின் மிகப்பெரிய நகரமான அக்லாந்தை ஆர்டொ்ன் கடந்த வாரம் இரண்டு வார முடக்க நிலையின் கீழ் வைத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், தாக்குதல் நடத்திய நான்கு பேரும் சிறப்பு பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என இஸ்மாயில் முக்தார் உமர் கூறினார்.

சமீபத்தில் கட்டப்பட்ட ஹோட்டல் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்குச் சொந்தமானது என்றும் இந்த ஹோட்டல் அதிகாரிகளிடையே பிரபலமானது என்றும் கூறப்படுகின்றது.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சோமாலியாவில் அரசுக்கு எதிராக அல் ஜுபாப் இயக்கத்தினர் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேல் - ஐக்கிய அரபு அமீரகம் இடையே தொலைபேசி சேவை!



இஸ்ரேலுக்கும், ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் இடையிலான நல்லுறவு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, இரு நாடுகளுக்கும் இடையே தொலைபேசி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும், ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் இடையே தூதரக நல்லுறவை ஏற்படுத்துவதற்கான வரலாற்று சிறப்பு மிக்க ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்கா அண்மையில் அறிவித்தது.

3 நாடுகளுக்கும் இடையே நீண்டகாலமாக நடைபெற்று வந்த பேச்சுக்குப் பிறகு இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் மூலம் இஸ்ரேலுடன் தூதரக உறவை ஏற்படுத்தியுள்ள முதல் வளைகுடா நாடாகவும், மூன்றவாது அரபு நாடாகவும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியுள்ளது. இதற்கு துருக்கி, ஈரான் உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

எனினும், பலஸ்தீன பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்த ஒப்பந்தம் சாதகமான சூழலை ஏற்படுத்தும் என்று அமெரிக்காவும், ஐக்கிய அரபு அமீரகமும் கூறி வருகின்றன. இந்த ஒப்பந்தத்தை ஐ.நா.வும், சீனா உள்ளிட்ட நாடுகளும் வரவேற்றுள்ளன.

இந்த நிலையில், இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடையிலான தூதரக ஒப்பந்தத்தின் முதல்படியாக இரு நாடுகளுக்கும் இடையே தொலைபேசி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இஸ்ரேல் தகவல் தொடர்புத் துறை அமைச்சர் யாவோஸ் ஹண்டேல் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இஸ்ரேலுக்கும், ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் இடையே தொலைபேசி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த சேவைக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கிய ஐக்கிய அரபு அமீரகத்துக்கு பாராட்டுக்கள். இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே ஏராளமான வர்த்தக வாய்ப்புகளுக்கு வழி கிடைத்துள்ளது. இரு நாட்டு நலன்களையும் மேம்படுத்துவதில் இது ஒரு முக்கியமான நடவடிக்கையாகும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லண்டனில் சிறுவன் உயிரிழப்பு பெண் ஒருவர் கைதாகினார்!

மேற்கு லண்டனில் உள்ள வீட்டில் 10 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக பெண்ணொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) உள்ளூர் நேரப்படி 02:30 மணிக்கு மேற்கு லண்டனில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு ஒரு பெண் சென்று பொலிஸ் அதிகாரிகளுடன் பேசினார் எனப் பெருநகர பொலிஸார் தெரிவித்தனர்.

சிறிது நேரத்திற்குப்பிறகு, ஆக்டனின் கம்பர்லேண்ட் பூங்காவில் உள்ள ஒரு வீட்டில் சிறுவன் இறந்து கிடந்தான்.

அதிகாரிகள் அவரது அடையாளத்தை அறிந்திருப்பதாக நம்புகிறார்கள், ஆனால் முறையான அடையாளத்திற்காகக் காத்திருக்கிறார்கள். சிறுவனின் உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## அல் - பாப் ஆயுதக்குழு தாக்குதல் சோமாலியாவில் 12 பேர் உயிரிழந்தனர்!

சோமாலியா தலைநகர் மொகடிசுவின் லிடோ கடற்கரை பகுதியில் அமைந்துள்ள உயர்தர சொகுசு ஹோட்டல் ஒன்றில், அல் – பாப் ஆயுதக் குழு நடத்திய துப்பாக்கி மற்றும் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 12பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி ஹோட்டலுக்குள் ஆயுதங்களுடன் புகுந்த பயங்கரவாதிகள் அங்கிருந்தவர்களை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்தனர் என்று கூறப்படுகிறது. ஹோட்டலில் துப்பாக்கிச் சூடும் மற்றும் வெடிகுண்டுகள் வெடிக்கும் சத்தமும் கேட்டதால் அப்பகுதியே போர்க்களம் போலக் காட்சியளித்தது. தகவல் அறிந்து விரைந்து வந்த பாதுகாப்பு படையினர், ஹோட்டலுக்குள் நுழைந்த பயங்கரவாதிகள் மீது தாக் குதல் நடத்தினர்.

மூன்று மணி நேர கடுமையான துப்பாக்கிச் சண்டையின் பின்னர் ஹோட்டல் முற்றுகை முடிவடைந்தது என்று அரசாங்க செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் முக்தார் உமர் கூறினார்.

உயிரிழந்த 12 பேரில் இரண்டு அரச ஊழியர்கள், மூன்று ஹோட்டல் பாதுகாப்பு காவலர்கள், நான்கு பொது மக்கள் மற் றும் அடையாளம் தெரியாத மூன்று பேர் உள்ளனர் என்று பொலிஸ் அதிகாரி அகமது பஜுனே மேற்கோளிட்டுள்ளார்.

# தமிழ் எம்.பிக்கள் அனைவருமே இணைந்து பயணிக்கவேண்டும்



## சாள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை

வவுனியா, ஓக 18

**வடக்கு - கிழக்கில் தெரிவுசெய்யப்பட்டுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழர்களின் அரசியல் விடிவுக்காக இணைந்து பயணிக்கவேண்டும். அந்த ஒற்றுமையை தான் எதிர்பார்த்து நிற்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

**வவுனியா சாளம்பன் பகுதியில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.**

**அவர் மேலும் கூறுகையில்-**

கூட்டமைப்பானது கடந்த தேர்தலில் 16 ஆசனங்களை பெற்றுக்கொண்ட நிலையில் இம்முறை 10 ஆசனங்களையே பெற்றுள்ளது. வன்னியில் கூட ஒரு ஆசனத்தை இம்முறை நாம் இழந்திருக்கின்றோம்.

இந்தத் தேர்தலில் ஆட்சியாளர்கள் அதிகாரவ் பலம் மற்றும் பண பலம் என்பவற்றைப் பயன்படுத்தியிருந்தார்கள். அதனை விட எம்மவர்கள் பிரிந்து நின்று இந்தத் தேர்தலைச் சந்தித்தார்கள். இப்படியான சூழலிலும் கூட்டமைப்புக்கு வாக்களித்த அனைத்து தமிழ் உறவுகளுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இம்முறை தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் தேசியக் கட்சிகளுக்கு அதிகமாக வழங்கப்பட்டுள்ளன. அது ஏன் என்பதை எம்மால் இன்னும் ஊகிக்க முடியவில்லை.

எமது கட்டமைப்புகளை சிதைப்பதற்கு அவர்கள் தயாராக இருக்கின்ற நிலையில் சிலர் ஏன் இவ்வாறான மனநிலையில் இருந்தார்கள் என்பது வேதனையான விடயமாக இருக்கின்றது. எமக்கு ஏற்ப்படக்கூடிய நெருக்கடிகளை நாங்கள் புரிந்துகொள்ளாத நிலையில் இருந்திருக்கிறோம்.

கடந்த தேர்தலில் எனக்கு கிடைத்த விருப்பு வாக்குகள் கூட இம்முறை குறைந்தே காணப்படுகின்றது. எனவே தேர்தல் முடிவை ஒரு பாடமாகவே நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன்.

அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை பதவி ஏற்பு நிகழ்வில் கூட தனிச்சிங்கள கொடியைப் பறக்க விட்டு இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்குரியது என்ற செய்தியை அவர்கள் சொல்லியிருகின்றார்கள். ஆட்சியாளர்களின் செயற்பாடு தமிழ் மக்களை அச்சம் கொள்ளவைத்துள்ளது.

அத்துடன் வடக்கு – கிழக்கில் தெரிவுசெய்யப்பட்டுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழர்களின் அரசியல் விடிவிற்காக இணைந்து பயணிக்கவேண்டும் என்பது எனது விருப்பம். அந்த ஒற்றுமையை நான் எதிர்பார்த்துநிற்கின்றேன்.

இதேவேளை, தமிழர்களின் அரசியல் தீர்வு விடயம் தொடர்பில் இருக்கின்ற அரசோடு பேசுவதற்கு நாம் பின்னிற்கவில்லை. தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் யாப்புமாற்றம் ஒன்று உருவாக்கப்பட்டால் அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக பிரதமருடனான சந்திப்பில் ஏற்கனவே தெரிவித்திருந்தோம். எனவே பாராளுமன்றம் கூடிய பின்னர் எமது கோரிக்கைகளில் மிகப் பிரதானமான விடயமாக இந்தவிடயம் இருக்கும்.

அந்தவகையில் வடக்கு – கிழக்கில் எமது மக்கள் தனித்துவமாக இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக வேண்டும். அதுவரைக்கும் நாம் உழைக்கவேண்டும் – என்றார்

## சு.கவின் தலைமை மஹிந்தவுக்கே சுந்திரிகாவுக்கு வாசுதேவ பதில்!

கொழும்பு, ஓக.17

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் சுதந்திரக் கட்சி ஒன்றிணைக்கப்பட்டு அதன் தலைமைத்துவம் முழுமையாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட வேண்டும் என நீர்வழங்கல் துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அதேநேரம், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பணடாரநாயக்க குமாரதுங்கவின் கருத்துக்கள் பயனற்றவை எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொலன்னாவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவித்த அவர், ‘30 வருட கால யுத்தத்தை தோற்கடித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2015 ஆம் ஆண்டு அரசியல் சூழ்ச்சிகளால் தோற்கடிக்கப்பட்டார்.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் மக்கள் 2015 ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் எடுத்த தவறான தீர்மானத்தைத் திருத்திக் கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தைப் பலமாக ஸ்தாபித்துள்ளார்கள்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் பயனற்றவை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் சுதந்திரக் கட்சி ஒன்றிணைக்கப்பட்டு தலைமைத்துவம் முழுமையாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட வேண்டும். சுதந்திர கட்சியைப் பாதுகாக்கும் பொறுப்பு எமக்கும் உண்டு.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறிப்பிடும் கருத்துக்களை மக்கள் ஏற்கமாட்டார்கள். அவர் எதிர்த்தரப்பிற்கு ஆதரவாகச் செயற்படுகிறார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை மக்கள் தொடர்ந்தும் பலப்படுத்துவார்கள்’ என அவர் மேலும் தெரிவித்தார்.

## அமைச்சரவை அந்தஸ்து அமைச்சு கிடைக்காததால் தயாசிறி கவலை!

தற்போதைய அரசில் தனக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியைக் கேட்டிருந்த போதிலும் இராஜாங்க அமைச்சர் பதவியேவழங்கப்பட்டதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர கவலை வெளியிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, ’அமைச்சர்களாக நியமிக்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூன்று பேரின் பெயர்களை பொதுஜன பெரமுனவுக்கு நான்தான் அனுப்பினேன்.

அதாவது நிமால் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர மற்றும் எனது பெயர் என்பன அதில் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. மேலும் தேசிய பட்டியல் நாடாளுமன்ற



உறுப்பினர் பதவியை வழங்கும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகளை நான் வரிசைப்படுத்தி அனுப்பி இருந்தேன்.

எனினும் அதில் முதலில் ரோஹன லக்ஷ்மன் பியதாசவின் பெயரே பட்டியலில் முதலில் சேர்க்கப் பட்டிருந்தது’ என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தொழில்பெறும் பட்டதாரிகளின் விவரம் இணையத்தளத்தில் இன்று வெளியீடு!

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் தொழில் பெறும் பட்டதாரிகளின் பெயர் பட்டியல் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் இன்று (திங்கட்கிழமை) வெளியிடப்பட்டுள்ளது.

இதேநேரம், தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்கள் அந்த அமைச்சால் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் நியமனம் பெறுபவர்கள் செப்ரெம்பர் மாதம் 02 ஆம் திகதி தமக்கு அருகில் உள்ள பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் தொழில் வாய்ப்புக்கள் தொழிலற்ற பட்டதாரிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதோடு, ஒரு லட்சம் தொழில் வாய்ப்புகளுக்காக பொருத்தமானவர்கள் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறைந்த வருமானம் கொண்டவர்கள் ஒரு லட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பை வழங்குவதற்காக பல்துறை அபிவிருத்தி செயலணி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.

நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு தொழில் வழங்கும் வேலைத்திட்டத்தை இடைநிறுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் பணிப்புரை விடுத்தமையால் இவ்வேலைத்திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

எனினும் தற்போது தேர்தல் நிறைவடைந்துள்ளதால் இந்தத் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பு!

இலங்கையில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 895 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை இன்று (திங்கட்கிழமை) கண்டறியப்பட்டுள்ள நிலையில், இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

ஓமானில் இருந்து வருகைதந்த 2 பேருக்கே இவ்வாறு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் இந்த வைரஸ் தொற்றில் இருந்து இன்று மேலும் 6 பேர் குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர். இதனையடுத்து இந்த வைரஸிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 676 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான 208 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்., அவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் இந்த வைரஸ் தொற்று சந்தேகத்தில் 55 பேர் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதோடு, இந்த வைரஸ் காரணமாக இலங்கையில் இதுவரையில் 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.08.2020 இல் வெளியிடப்பெற்றது.